**MCOP NO:1041/2023** **DATE: 12.12.2025**

ம.சா :1

பெயர் : திரு.கார்த்திகேயன்

த/பெ : திரு.ஆறுமுகம்

வயது : 29

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் முதல் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவர் எனது தாயார் ஆவார். விபத்தானது 13.01.2023 அன்று மதியம் 03.00 மணியளவில் எண்ணூர் எக்ஸ்பிரஸ் சாலையில் நடந்தது. விபத்தின் பொழுது எனது அம்மா எனது அப்பாவின் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது தான் விபத்து ஏற்பட்டது. என் அம்மா அமர்ந்து சென்ற அந்த இருசக்கர வாகனத்தை எனது அப்பா தான் ஓட்டி சென்றார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து குறித்த தகவலை எனது அப்பா தான் எனக்கு தெரிவித்தார். புகார் நான் தான் கொடுத்தேன். விபத்தானது யாருடைய தவறின் கீழ் நடந்தது என்று சொல்லியுள்ளீர்களா என்றால் யாருடைய தவறாலும் விபத்து நடைபெறவில்லை, என் அம்மா நிலைதடுமாறி இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. ஆனால் முதல் தகவல் அறிக்கை எனது அப்பா மீது தான் பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்திற்காக பதியப்பட்ட வழக்கானது எனது அப்பாவின் தவறு இல்லை என்பதாலும், எனது அம்மாவின் தவறால் தான் கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டு இறந்து விட்டதால் புகாரின் பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கூறி Further Action dropped என்று வழக்கை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அதற்கான இறுதி அறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான் அது எமசாஆ1. இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரராக காட்டப்பட்டுள்ள நபர் எனது தகப்பனார். அவர் 02.03.2025ல் இறந்து விட்டார். அவரும் வேறொரு விபத்தினால் தான் இறந்து விட்டார். எனது அப்பாவான 1ம் எதிர்மனுதாரர் இந்த மனுவை தொடர்ந்து நடத்தவில்லை. எனது அப்பா நானும், 2ம் மனுதாரரும் தான் வாரிசுகள் ஆவோம். அதனால் எனது அப்பாவின் வாகனத்திற்கு அவர் இறந்த பின்னிட்டு நாங்கள் தான் உரிமையார்கள் என்று சொன்னால் சரிதான். எனது அக்காவிற்கு

திருமணம் ஆகிவிட்டது. அவர் அவருடைய கணவருடன் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகவில்லை. நான் Cognizant என்ற நிறுவனத்தில் Tech lead ஆக பணிபுரிந்து மாதம் ரூ.40,000/– சம்பளம் பெற்று வருகிறேன். எனது அம்மா சுய தொழில் செய்து வந்தார், அதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நானோ, 2 ம் மனுதாரரோ இறந்து போன என் அம்மாவின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. தற்போது நிலையில் நான் தான் எனது அப்பாவின் வாரிசு என்பதால், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திற்கு நான் தான் உரிமையாளராக உள்ளதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 12.12.2025 ல் சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.